பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 09 2022 7 15

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. புதிய இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை குறித்த பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சொற்பொழிவுகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் இன்று புதுதில்லியில் வெளியிடுகிறது.

2. பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. யுக்ரைன் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண உலக நாடுகள் வலியுறுத்த வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. துறைமுகங்கள் வரைவு மசோதாவில் மாநில அரசு உரிமைகளை பாதிக்கக்கூடிய அம்சங்களை நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
5. இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது ட்வெண்டி - ட்வெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

புதிய இந்தியா குறித்த பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சொற்பொழிவுகள் அடங்கிய புத்தகத் தொகுப்பு இன்று புதுதில்லியில் வெளியிடப்படுகிறது.

பிரதமர் ஆற்றிய உரைகள், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் புத்தக வெளியீட்டுப் பிரிவு **Sabka Sath, Sabka Vikas, Sabka Viswas, Prime Minister Narendra Modi Speaks** என்ற தலைப்பில் இப்புத்தகத்தை வெளியிடுகிறது.

பிரதமரின் உரைகள் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ளன.

புதுதில்லி ஆகாஷவானி பவனில் நடைபெறவுள்ள இதற்கான நிகழ்ச்சியில், கேரள மாநில ஆளுநர் திரு. ஆரிஃப் முஹமது கான், முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கைய நாயுடு, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலர் திரு. அபூர்வ சந்திரா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

2019ஆம் ஆண்டு மே மாதம் முதல், 2020ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான பிரதமரின் 86 உரைகள் இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

அமேஸான் மற்றும் கூகுள் ப்ளே மூலமாகவும், பாரத் கோஷ் இணையதளம் மூலமாகவும் இந்த புத்தகத்தை பெற்றுக் கொள்ளலாம்.

<<<<>>>>

மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் பங்கேற்கும் தேசிய மாநாட்டினை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்து உரையாற்றுகிறார்.

குஜராத் மாநிலம் **Ekta** நகரில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்காக மாநில அரசுகளுடன், ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்படவுள்ளது.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான வாழ்வியல் முறை குறித்தும் இதில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்த, இரண்டு நாள் மாநாடு ஆறு அமர்வுகளை கொண்டதாக இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பத்ரிநாத் மற்றும் கேதார்நாத்-தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப்பணிகளின் முன்னேற்றம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இங்குள்ள கோவில்களுக்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை வரும் நாட்களில் வெகுவாக அதிகரிக்கக்கூடும் என்று பிரதமர் கூறினார்.

இதனைகருத்தில்கொண்டு, அவர்களின் பாதுகாப்பிற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பிரதமர் அறிவுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற, உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, கேதர்நாத் மற்றும் பத்ரிநாத்தில் மறுசீரமைப்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

அடுத்த ஆண்டு இறுதிக்குள் இப்பணிகளை நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு பருவத்தில் இதற்காக விவசாயிகளுக்கு விதைத் தொகுப்பு வழங்கப்பட்டு வருவதாக வேளாண்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மழைப்பொழிவு குறைவாக காணப்பட்ட உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட் மாநிலங்களில் உள்ள விவசாயிகளுக்கு இந்த தொகுப்பு வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது பிரபலமாக உள்ள தானிய வகைகள் இந்த தொகுப்பில்

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று பீகார் செல்கிறார்.

புர்னியா மாவட்டத்தில், ரங்பூமி மைதானத்தில் நடைபெறவுள்ள பேரணியில் அவர் உரையாற்றுகிறார்.

இதனை தொடர்ந்து நாளை கிஷன்கன்ஞ் மாவட்டத்தில் நடைபெறும் பிஜேபி நிர்வாகிகள் பங்கேற்கும் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் வெளியேறியதை அடுத்து திரு. அமித் ஷா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சிகள் முக்கியதுவம் பெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பசுமை எரிசக்திக்கான சர்வதேச நடவடிக்கை அமைப்பின் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் நிலைப்பாடு விரிவாக எடுத்துரைக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள அவர், இதுதொடர்பாக இன்று நடைபெறவுள்ள வட்டமேஜை மாநாட்டில் தாம் உரையாற்றவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில், 30 நாடுகளின் எரிசக்தித்துறை அமைச்சர்கள் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பாரம்பரிய மருத்துவத்தில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய ஆயுஷ்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

நேற்று பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாரம்பரிய மருத்துவமுறையை ஊக்கப்படுத்துவதற்காக தமது துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.

தேசிய ஆயுஷ் இயக்கத்தின்கீழ், பாரம்பரிய மருத்துவமுறை சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாரம்பரிய மருத்துவமுறை சார்ந்த படிப்புகளில் இளையோர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பாரம்பரிய மருத்துவ முறை மேலும் பிரபலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஆயுஷ் துறை இணையமைச்சர் டாக்டர் **Mahendra Munjapara** வலியுறுத்தியுள்ளார்.

நேற்று, மிசோரம் மாநிலம் **Aizwl –**ல் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

மிசோர மாநில அரசு ஆயுஷ் முறை மருத்துவத்தை பிரபலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியவை என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையும், ஆயுஷ் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக அமைச்சர்

<<<<>>>>

ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 27ஆம் தேதி டோக்கியோ செல்கிறார்.

புதுதில்லியில் இதைத்தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. அரிந்தம் பக்ஷி, ஜப்பான் பிரதமர் திரு. **Fumio Kishida-**வையும் திரு. மோடி சந்திக்க இருப்பதாக தெரிவித்தார்.

வேலை தேடி தாய்லாந்து செல்லும் இந்தியர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அங்குள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இந்திய இளைஞர்களை மியான்மருக்கு அனுப்பி வைப்பதாகவும், இதனால் அவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடுவதாகவும் அவர் கூறினார்.

தாய்லாந்து மற்றும் மியான்மரில் உள்ள இந்திய தூதரகங்கள் மூலம் இவ்வாறு பாதிக்கப்பட்ட இளைஞர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கனடாவில் இருந்து செயல்படும் சில தீவிராத குழுக்களை கட்டுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அரசிடம் தூதரகம் வாயிலாக வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் திரு. அரிந்தம் பக்ஷி தெரிவித்தார்.

<<<<>>>>

யுக்ரைன் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண உலக நாடுகள் வலியுறுத்த வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ரஷ்யாவுக்கும் - யுக்ரைனுக்கும் இடையிலான பகைமை உணர்வுகளை களைந்து இயல்புநிலைக்கு கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகள் மற்றும் தூதரக ரீதியிலான நடவடிக்கைகள் மூலமே அங்குள்ள நிலைமையை இயல்புநிலைக்கு கொண்டுவர முடியும் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டுவரும் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டுவரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி பெரும் மாற்றத்தை கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தார்.

இந்த வரி வருவாய் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

கோவிட் தாக்கத்திலிருந்து மீண்ட பின்னர் நாடு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

வறுமைக்கோட்டிற்குகீழ் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 10 சதவீதமாக குறைந்துள்ளது என்றும் திரு. நட்டா கூறினார்.

மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு 550 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு 633 ஏக்கர் நிலம் மத்திய அரசு கேட்டிருந்த நிலையில், தமிழக அரசு 543 ஏக்கர் நிலத்தை மட்டுமே கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மதுரையில் எயிம்ஸ் மருத்துவமனைய அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட வளர்ச்சிக்காக இதுபோன்ற திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச அரங்கிலும் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்துள்ளதாக திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<>>>>

துறைமுகங்கள் வரைவு மசோதாவில் மாநில அரசு உரிமைகளை பாதிக்கக்கூடிய அம்சங்களை நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த வரைவு மசோதா சிறு துறைமுகங்களின் எதிர்கால வளர்ச்சியை தடுப்பதாக உள்ளது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு, சர்ச்சைக்குரிய பிரிவுகளை மத்திய அரசு நீக்கிட வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாகாலாந்து சட்டப்பேரவை வரலாற்றில் முதல் முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை கேள்விநேரம் கூடுதலாக 65 நிமிடங்கள் நடைபெற்றதாக பேரவைத் தலைவர் திரு **Sharingain Longkumer** கூறியுள்ளார்.

நேற்று அம்மாநில சட்டப்பேரவையில் உரையாற்றிய அவர், நடப்பு சட்டப்பேரவையில் 26 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, அவை நடவடிக்கைகள் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவதாகவும் திரு **Sharingain Longkumer** அறிவித்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நாக்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று ஆஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது.

<<<<>>>>

**Braga** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - இந்தோனேஷியாவின் **Christopher Rungkat** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<the end>>>>**